**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

16.07.2025

O.S. No. 276/2022

P.W.1 திரு. M.S. மணி

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

வாதி சங்கத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் அது எனக்கு தொியாது. என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரம் அளித்து தீர்மானம் செய்த அன்று எத்தனை உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள், எத்தனை பேர் கையொப்பம் செய்தார்கள் போன்ற விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியாது. அந்த கூட்டத்திற்கு எத்தனை உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தொியாது என்றால் சரிதான். வாதி சங்கத்தின் தலைவர் திரு. வேதாந்தம் நல்ல உடல் நிலையில்தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. அவருக்கு உடல்நலம் சரியில்லை. இந்த நீதிமன்றத்திற்கு அவர் வந்தால் உண்மையான விவரங்கள் வெளி வந்துவிடும் என்பதால் அதை மூடிமறைப்பதற்காக என்னை சாட்சியம் சொல்ல அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் என்னை அனுப்பியுள்ளார்கள். வாதிக்காக சாட்சியம் அளிப்பதற்காக தேவையான எல்லா விவரங்களும் எனக்கு தொியாது என்றாலும் அதனால் நான் வாதிக்காக சாட்சியம்

அளிக்க தகுதியற்றவர் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 6 ஆவண பணப்பற்று ரசீதில் நாகர்கோவில் தெற்கு ரதவீதியில் வசதிக்கும் சங்கரநாராயண ஐயர் புத்திரர் வெங்கடாச்சலம் ஐயர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல திருவனந்தபுரம் தாலுகா, பால்குளம் கரை வில்லேஜ், பெருந்தான்னியில் வடசேரி அம்ம வீட்டில் கேப்டன் வி பத்மநாபன் தம்பி அவர்களுடைய அனந்திரவன் லேன்லார்டு 35 வயதான வி வேலாயுதம் தம்பி அவர்கள் எழுதி கொடுத்த கிரய ஷேச பணப் பற்று ரசீது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பாக பெருந்தான்னியில் வடசேரி அம்ம வீட்டில் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 ஆவணம் எந்த சார் பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கொட்டாரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடசேரி பெருந்தான்னியல் உள்ளது என்றாலும் நாகர்கோவிலில் உள்ள வடசேரி அதில் குறிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 6 ஆவணத்தில் சாட்சிகளாக யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. அதில் முதல் சாட்சிகளாக மதுராஸ் கோடம்பாக்கம் ஸ்டேசன் ரோடில் 2/10 நம்பர் வீட்டில் தாமசம் சி.ஏ. பொன்னுசாமி மகன் ஆடிட்டர் செங்கல்வராயன் மற்றும் இரண்டாவது சாட்சியாக மதுராஸ் மேற்குமாம்பலம் லேக்வியூ ரோடில் 33 நம்பர் வீட்டில் தாமசம் ஆடிட்டர் வி. லோகநாதன் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த ஆவணத்தை தயார் செய்தவர் மகராஜாபிள்ளை மகன் எம். சுப்பையாபிள்ளை என்றால் அது எனக்கு தொியாது.

அந்த மகராஜாபிள்ளை மகன் சுப்பையாபிள்ளை பற்றிதான் ஏற்கனவே என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 6 ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேன். அதில் எல்கையில் கன்னியாகுமரி கோவிலுக்கும் வடக்கே தரையில் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மலையாள பேச்சு வழக்கில் தரை என ஒரு பெரிய மனையை குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 ஆவணம் கள்ளத்தனமாக வெங்கடாச்சலம் ஐயர் உருவாக்கிய போலி ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7 ஆவணம் என்ன ஆவணம் என்றால் வெங்கடாச்சலம் ஐயரால் மகரிஷி இன்டர்நேஷ்னல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்சஸ் அன்ட் லேனிங் நிறுவனத்திற்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரய ஆவணம். அதன் தேதி என்ன என்றால் 06.07.1981. நாகர்கோவில் நாகராஜா கோவில் தேர் கீழரத வீதியில் விஸ்வ ஹிந்து வித்யா கேந்தராவின் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். அதன் பழைய கதவு எண். 49, புதிய கதவு எண். 42. வா.சா.ஆ. 7 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளது அனந்தபத்மநாபன். இன்னொரு சாட்சி கே.பி. வெங்கடாச்சலம் ஐயர். அவர்கள் இருவரும் தம்மம் தெரு கோட்டையில் வசித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எஸ். வெங்கடாச்சல ஐயரின் முகவரி அந்த ஆவணத்தில் நம்பர் 6 அப்பு ஐயர் தெரு, நாகர்கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்பு ஐயர் தெரு எங்கு உள்ளது என்றால் நாகராஜா கோவில் அருகே உள்ள தெற்கு ரதவீதியில் உள்ளது. அவ்வாறு அந்த தெரு, அந்த இடத்தில் உள்ளது என காட்டுவதற்கு ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் சொல்வது

போல நாகர்கோவிலில் அந்த பகுதியில் அப்பு ஐயர் என்ற தெருவே கிடையாது என்றாலும் அது கள்ளத்தனமாக உருவாக்கிகொண்ட ஒரு தெருவின் பெயர் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 7 ஆவணம் இரண்டாவது பக்கத்தில் 6, 7 வது வரியில் V. Velayuthan Thampi Nephew of Captan V Padmanabhan Thampi of Vadasery Amma Veedu, Perumthanni Trivandrum என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ஆவணத்தில் வி. வேலாயுதம் தம்பியின் அப்பா பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் இரண்டாவது பத்தியில் வேலாயுதம் தம்பி அந்த ஆவணத்தின் A Schedule சொத்தில் Palace Lodge என்ற லாட்ஜ்ஜை நடத்தி வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு லாட்ஜ் நடத்தும்போது பொதுவாக கன்னியாகுமரி டவுண் ஷிப்பில் உரிய உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான், அவ்வாறு பெற்றுள்ளார்கள். எந்த வருடம் அவ்வாறு வெங்கடாச்சலம் ஐயர் உரிமம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. 1973 லிருந்து நடத்தி வருகிறார். வெங்கடாச்சலம் ஐயர் 1973 லிருந்து உரிமம் பெற்று Palace Lodge நடத்தி வருகிறார் என காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வா.சா.ஆ. 7 ஆவணத்தில் 9 வது பக்கத்தில் B Schedule ல் உள்ள சொத்து திருவனந்தபுரம் தாலுகா, உளிஅழித்துரா கிராமத்தில் ½ சென்ட் (20 சதுர மீட்டர்) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உளிஅழித்துரா என ஒரு கிராமமே கிடையாது என்றால் அது எனக்கு தொியாது. அந்த ஆவணத்தின் பி பட்டிகை சொத்தை குறித்து அது வேலாயுதம் பிள்ளைக்கு உரிமை பட்டது என காட்டும் எந்த

ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். அது திருவனந்தபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ. 7 ல் உள்ள பி பட்டிகை சொத்து கற்பனையாக உருவாக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வா.சா.ஆ. 7 ஆவணத்தில் B Schedule சொத்து தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ஆவணத்தில் உள்ள A Schedule சொத்து கோவில் சொத்து என்பதால் நாகர்கோவிலில் பதிவு செய்யமாட்டார்கள் என திருவனந்தபுரத்தில் கோவில் சொத்தையும் சேர்த்து, பதிந்து கொண்டோம் என்றால் சரியல்ல. மகரிஷி இன்டர்நேஷ்னல் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் என்ற நிறுவனத்திற்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் வா.சா.ஆ. 7 ஆவணம் செல்லுபடியாகதது என்றாலும் அது போலியான ஆவணம் என்றாலும் சரியல்ல. 20.02.1972 தேதியிட்ட வா.சா.ஆ. 5 ஆவணம் மற்றும் வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 4 ஆவணங்களின் அசல் இல்லாததால் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணங்களின் அசல் திருநெல்வேலி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 1 முதல் 4 வரையிலான ஆவணங்களின் அசல் வெங்கடாச்சல ஐயரிடம் இல்லாததால்தான் அவைகளை மகரிஷி இன்டர்நேஷ்னல் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் நிறுவனத்திற்கு கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. வெங்கடாச்சல ஐயரிடம்தான் வா.சா.ஆ. 1 முதல் 4 வரையிலான ஆவணங்களின் அசல் இருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 7 ஆவணத்தில் 8 ஆம் பக்கம் இல்லை என்றால் சரிதான்.

உண்மை வெளிவந்துவிடும் என்பதால் அந்த 8 ஆம் பக்கத்தை மறைத்து இதர பக்கங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ. 7 ஆவணம் ஒரு முழுமையான ஆவணமே அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.